பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(27.09.2023 முதல் 01.10.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 77 (09) PJN/GKMS/2023 தேதி: 26.09.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (21.09.2023 முதல் 25.09.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -01.10.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/09 | 22/09 | 23/09 | 24/09 | 25/09 | | நாள்-1 27/09 | நாள்-2 28/09 | நாள்-3 29/09 | நாள்-4 30/09 | நாள்-5 01/10 |
| 0 | 1 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 6 | 5 | 5 | 5 | 6 |
| 36 | 36 | 36 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 34 | 34 | 33 | 33 |
| 27 | 26 | 27 | 27 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 26 | 25 | 25 | 24 |
| 2 | 2 | 4 | 4 | 5 | மேக மூட்டம் | 8 | 7 | 8 | 8 | 7 |
| 56-81 | 59-79 | 55-85 | 49-79 | 58-81 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-70 | 50-70 | 50-70 | 50-70 |
| 5 | 4 | 5 | 6 | 5 | காற்றின் வேகம் (கி.மீ) | 20 | 22 | 22 | 24 | 22 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (27.09.2023 முதல் 01.10.2023 வரை):**

- செப்டம்பர் 27 லிருந்து அக்டோபர் 01 வரை லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 24-35 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 20-24 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- அக்டோபர் 01 லிருந்து 07 வரை மழை (7.71 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (30.88 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.14 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | நெல் விதை இரகங்கள் | பின்சம்பா/தாளடி பருவத்திற்கு ஏற்ற மத்திய கால நெல் இரகங்களான எடிடீ 38 (ADT 38), எடிடீ 39 (ADT 39) எடிடீ 46 (ADT 46), கோ 50 (Co 50), கோ 52 (Co 52), டீகேஎம் 13 (TKM 13), டீஆர்ஒய் 3 (TRY 3) மற்றும் கேகேஎல்ஆர் 2 (KKLR 2) விதைகளை பயன்படுத்தலாம். |

| | | |
|---|---|---|
| | உலர் விதை நேர்த்தி | ஒரு கிலோ விதைக்கு கேப்டான் அல்லது திரம் பூசணக் கொல்லியுடன் 4 கிராம் என்ற அளவில் விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்னதாகவே கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இம்முறையானது நாற்றுகளுக்கு 40 நாட்கள் வரை **குலைநோய்** மற்றும் **செம்புள்ளி** நோய் போன்றவை தாக்காமல் பாதுகாக்கிறது. |
| | நெல் விதைப்பு | செப்டம்பர் 30 வரை நேரடி நெல் விதைப்பை மேற்கொள்ளலாம். |
| | களை மேலாண்மை | **நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பூட்டாக்ளோர் (Butachlor 50 EC) என்ற களைக்கொல்லியை 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த எட்டாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பிரிடிலாக்குளோர் + சேப்னர் (Pretilachlor + safener 30 EC) என்ற களைக்கொல்லியை 0.45 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த மூன்றாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி புழுதி விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு பயிர் விதைத்து 5 நாட்களுக்குள் முளைக்க போதுமான மழை பெய்த உடனேயே ஹெக்டருக்கு பெண்டிமெத்தாலின் (pendimethalin 30 EC) 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த ஐந்தாம் நாள் தெளிக்க வேண்டும். |
| கால்நடை | ஊட்டமேற்றிய வைக்கோல் | இந்த மாதத்தில் வறண்ட நாட்களில் கால்நடைகளுக்கு வைக்கோலை யூரியா சத்தூட்டப்பட்டதாக மாற்றி வைத்து மழைக்காலம் தொடங்கி குளிர்காலம் முடியும் வரை தீவனமாக பயன்படுத்தலாம். (இதற்கு 100 கிலோ வைக்கோலை பாலித்தீன் சாக்குகளில் மேல் பரப்பி பின் 4 கிலோ யூரியாவை 65 லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோலின் மீது தெளிக்க வேண்டும். பின் காற்று புகாமல் அடைத்து 21 நாட்கள் கழித்து எடுத்து தீவனமாக பயன்படுத்தலாம்.) |
| | சப்பை நோய் மற்றும் ரத்தக்கசிவு செப்டிசீமியா | சப்பை நோய் மற்றும் ரத்தக்கசிவு செப்டிசீமியா நோய்கள் கால்நடைகளுக்கு பாக்டீரியா கிருமிகளால் ஏற்படுகிறது. இது பொதுவாக மழைக்காலத்தில் ஏற்படும் . எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாடுகளுக்கான |

| | | |
|---|---|---|
| | | சப்பை நோய் தடுப்பூசி (ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை) மற்றும் ரத்தக்கசிவு செப்டிசீமியா தடுப்பூசி (செப்டம்பர் முதல் அக்டோபர் வரை) அளித்து நோய்களின் தாக்குதலைத் தடுத்து கால்நடைகளை பாதுகாக்கவும். |
| | தைலீரியோசிஸ் | தைலீரியோசிஸ் என்ற நோய் கலப்பின மற்றும் வெளிநாட்டின மாடுகளைத் தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் நோயாகும்.இந்நோய் ஹைலோமா எனும் உண்ணிகளால் பரவுகிறது. இந்நோயினைப் பரப்பும் உண்ணிகளின் வளர்ச்சி செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அதிகமாக இருப்பதால் நோயின் தாக்கமும் அதிகமாகும். எனவே, உண்ணிகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடங்களான கால்நடைகளின் சாணம், கால்நடைக் கொட்டகைகளிலுள்ள இருண்ட ஈரமான மூலைகள், தேங்கியிருக்கும் தண்ணீர் போன்றவைகளிலும் கால்நடைக் கொட்டகைகளின் மூலை முடுக்குகள், சுவர் இடுக்குகள் மற்றும் மரப்பொருட்களின் இடுக்குகளில் அப்பூச்சிகளால் இடப்படும் முட்டைகளையும் அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருந்து இந்நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாக்கவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் நாற்றங்காலில், களை முளைப்பிற்கு முந்திய களைக்கொல்லியைப் பயன்படுத்தி களையைக் கட்டுப்படுத்தலாம்.

**முதல்வர்**